5

# பாவம் செய்யும் பழக்கத்தை மேற்கொள்ளுதல்

கிறிஸ்தவர்களாக, நாம் பாவகுற்றத்தின் மேல் மட்டும் அல்ல, பாவம் செய்யும் பழக்கத்தின் மேலும் வெற்றி உடையவர்களாக இருக்கிறோம். எந்த அளவிற்கு? கிறிஸ்தவர்கள் பாவம் செய்வதை ஒட்டுமொத்தமாக தவிர்க்க முடியுமா? அது நம்மை சர்ச்சைக்குறிய ஒரு கேள்வியிடம் கொண்டு வருகிறது: ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்வது சாத்தியமானதா?

இந்த பகுதியிலுள்ள பல வசனங்கள் ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்வதில்லை, உண்மையில் பாவம் செய்ய முடியாது என கூறுவதுபோல உள்ளது, இந்த வசனங்களை கவனியுங்கள்:

> *அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை (1 யோவான் 3:6).*
>
> *தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து[1] அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான் (1 யோவான் 3:9).*
>
> *தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம் ... (1 யோவான் 5:18).*

சிலர் இந்த வசனங்களை மிகவும் நேரடி பொருளில் எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஒரு முறை இரட்சிக்கப்பட்டவன், எப்போதும் இரட்சிக்கப்பட்டவன் என நம்புகிறார்கள். இந்த கொள்கையின்படி, ஒருவர் நித்தியத்திற்கு இழந்து போகத்தக்கதாக பாவஞ்செய்ய முடியாது, இந்த உபதேசத்தின் ஆதரவாளர்கள் ஒரு உண்மையான கிறிஸ்தவர் பாவம் செய்வதில்லை என நிருபிக்க இந்த வசனங்களை பயன்படுத்துகிறார்கள். கிறிஸ்தவராக காட்சி அளிக்கிற ஒருவர் பாவம் *செய்தால்* என்ன? அவர்களுடைய பதில், அதை செய்தவர் ஒரு கிறிஸ்தவராக காணப்பட்டபோதிலும், அவர் உண்மையான ஒரு கிறிஸ்தவராக இருக்கவில்லை என்பதற்கு அந்தப்பாவம் நிரூபணமாக உள்ளது.

அவர்கள் சரியானவர்களா? ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்வது சாத்தியமில்லாததா? கீழ்வரும் பரிசீலனைகள் அப்படி இல்லை என்ற கருத்தை உருவாக்குகிறது.

(1) ஒரு கிறிஸ்தவர் பாவம் செய்வது சாத்தியமானது அல்ல என்று கூறுவது அனுபவத்திற்கு முரணாக உள்ளது. தேவனுடைய பிள்ளைகளாகிய நாம்

பாவம் செய்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம், மேலும் உண்மையான கிறிஸ்தவர்களாக இருந்தவர்களும் பாவம் செய்ததை நாம் அறிந்திருக்கிறோம். இது வேதாகம கால கிறிஸ்தவர்களின் அனுபவத்திற்கு எதிராக செல்கிறது; புதிய ஏற்பாட்டு சீஷர்கள் பாவம் செய்த உதாரணங்களை நாம் உடையவர்களாக இருக்கிறோம்.[2]

*(2)* இது புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியை அர்த்தமற்றதாக்குகிறது, புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதி கிறிஸ்தவர்கள் பாவம் செய்யாதபடி வேண்டுவதற்காக எழுதப்பட்டது.

*(3)* இது ஒரு கிறிஸ்தவர் நித்தியத்திற்கும் இழந்து போகத்தக்கதாக பாவம் செய்வது சாத்தியமானதுதான் என போதிக்கும் வேதாகம வசனப்பகுதிகளோடு முரண்படுகிறது.[3] புதிய ஏற்பாடு விசுவாசத்திலிருந்து வழுவிப் போவதின் சாத்தியத்தை பற்றி உறுதியாக போதிக்கிறது.

இருப்பினும், இந்த வசனப்பகுதிகளை நேரடி அர்த்தத்தில் எடுத்துக்கொண்டு, ஒரு கிறிஸ்தவர்கள் பாவம் செய்வது சாத்தியம் அல்ல என நம்புவதிலுள்ள பெரிய பிரச்சனை என்னவெனில், அப்படிப்பட்ட வியாக்கியானம் யோவான் தனக்கு தானே முரண்படும்படி செய்கிறது. அவர் *1 யோவான் 1:8*இல், "நமக்கு பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" என்றார். மேலும், அவர் *1:10*இல், "நாம் பாவம் செய்யவில்லை என்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது" என பிரகடனப்படுத்தினார். கிறிஸ்தவர்கள் பாவம் செய்கிறார்கள் என்று யோவான் சொன்னார்!

அப்படியானால், "அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை," "அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்," மற்றும் "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்" என்பவைகளை எழுதின போது, அவைகளை எந்த அர்த்தத்தில் எழுதினார்? கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக்கூடும் என்று யோவான் சொன்னதிலிருந்து, பகுத்தறிவானது யோவான் இந்த அர்த்தத்தில் ஏதாவது சொல்லியிருக்கக்கூடும் என்ற ஆலோசனை முன்வைக்கப்படுகிறது: "கிறிஸ்தவர்கள் தொடர்ந்து பாவம் செய்வதில்லை; பாவம் அவர்களுடைய வாழ்க்கையின் ஒரு பழக்க முறையாக இருப்பதில்லை," பின்வரும் மூன்று வசனங்களில் வினைச்சொற்களும் நிகழ்காலத்தில் உள்ளன - ஒரு தொடர் நடவடிக்கையை குறிக்கிற காலம் - இந்த சந்தர்ப்ப பொருளில், தொடர்ந்து பாவம் செய்வது - என்ற விளக்கம் இவைகளால் வலுவூட்டப்படுகிறது ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவர் தொடர்ந்து பாவம் செய்வதில்லை அல்லது பாவம் ஒரு பழக்கமான செய்கையாக இருப்பதற்கு அனுமதிப்பதில்லை.[4] இந்த கருத்து சமீபத்திய மொழிபெயர்ப்பில் நன்கு தெரிவிக்கப்பட்டுள்ளது:

> அவரில் நிலைத்திருக்கிற எவனும் தொடர்ந்து பாவஞ்செய்வதில்லை … *(1 யோவான் 3:6;* EVS*).*

> தேவனால் பிறந்தவன் பாவம் செய்வதைப் பழக்கமாகக் கொண்டிருப்பதில்லை. தேவனுடைய வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறது, அவன் தேவனால் பிறந்துள்ளபடியினால் அவன் பாவத்தை தொடர்ந்து செய்து கொண்டிருக்கமாட்டான் *(1 யோவான் 3:9;* EVS*).*

> தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருப்பதில்லை என்பதை நாம் அறிந்திருக்கிறோம் ... (1 யோவான் 5:18; EVS).[5]

கிறிஸ்தவர்களாக, பாவத்தில் தொடர்வதை தவிர்ப்பது, நமக்கு எப்படி சாத்தியமானது? நமது தரப்பில் ஏதோ ஒன்று தேவைப்படும் நிலையில், கிறிஸ்துவின் உதவியால் மட்டுமே பாவம் செய்வதிலிருந்து நம்மை காத்துக்கொள்ள முடியும்.

## கிறிஸ்து நமக்காக என்ன செய்கிறார்?

கிறிஸ்தவர்கள் எவ்விதம் நீதியாக வாழமுடியும் என்பதை நாம் இந்த நிருபத்தில் வாசிக்கிறோம்: 1 யோவான் 5:18இன் படியாக, "தேவனால் பிறந்த எவனும் [பழக்கமாகப்] பாவஞ் செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான்." "தேவனால் பிறந்த" இயேசு கிறிஸ்து, நம்மை காக்கிறார்! நாம் "தொடர்ந்து பாவம் செய்யாதிருக்கும்படி" நம்மை பெலப்படுத்துகிறார். மறுபடியுமாக, 1 யோவான் 3:8இல் இயேசுவானவர், "பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே வந்தார் ..." என்று பார்க்கிறோம். நாம் பாவம் செய்யும்படி, பிசாசானவன் நமது வழியில் கொண்டு வருகிற சோதனைகளின் மேல் நமக்கு வெற்றியை கொடுப்பதற்காக இயேசு உலகத்தில் பிரவேசித்தார். மேலும் 1 யோவான் 3:9இல், அப்போஸ்தலன், "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது ..." என்றார். அந்த "வித்து" எதுவாயிருந்தாலும், அது கர்த்தரால் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் பாவத்தில் வாழ்வதற்கு பதிலாக கிறிஸ்துவுக்காக வாழும்படியாக நமக்கு பெலனளிக்கிறது.

இந்த வசனப்பகுதிகள் நாம் பாவபழக்கத்தின் மேல் வெற்றிகொள்ள போராடவேண்டும் - நாம் வெற்றியை உடையவர்களாயிருக்க முடியும் என்ற ஆலோசனையை முன்வைக்கிறது. இருப்பினும், நாம் நாமாகவே அந்த வெற்றியை சாதித்துக்கொள்ள முடியாது! கிறிஸ்துவினால் நாம் பாவ பழக்கத்தின்மேல் வெற்றி கொள்ள முடியும்! 1 யோவான் 4:4இல், நாம், "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்" என வாசிக்கிறோம். கிறிஸ்துவினால், நாம் உலகத்தையும் அதிலுள்ள பாவத்தையும் ஜெயிக்கமுடியும். நம்மில் இருக்கிறவர் பெரியவர் - அதாவது, இயேசு கிறிஸ்துவானவர் உலகத்தில் இருக்கிற எவனைக் காட்டிலும் பெரியவர்!

## நாம் என்ன செய்யவேண்டும்?

பாவம்செய்யும்பழக்கத்தை மேற்கொள்வதற்கு, நாம் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு மற்றும் நம்முடைய வாழ்க்கையில் பாவத்தை மேற்கொள்வதற்கும் ஜாக்கிரதையாக முயற்சிக்க வேண்டும். நிருபம் முழுவதும், யோவான் தன் வாசகர்களை பாவம் செய்யாதிருக்கும்படி வேண்டுகிறார். அவர்கள் பாவம் செய்யாதபடிக்கு அவர் அவைகளை எழுதினார் (1 யோவான் 2:1). அவர் அவர்களை இருளில் நடவாமல், ஒளியில் நடக்கும்படி உற்சாகப்படுத்தினார் (1 யோவான் 1:6, 7). அவர், அவர்கள் பாவபழக்கங்களை நேசிக்கக்கூடாது (அல்லது ஈடுபடக்கூடாது) என சொன்னார் (1 யோவான்

*2:15-17). அவர், அவர்களை நீதியை நடப்பிக்கும்படி உற்சாகப்படுத்தினார் (1 யோவான் 2:29). பிறகு, 1 யோவான் 3இல், பாவத்திற்கு விலகி, நீதியாய் வாழும்படி நான்கு காரணங்களை கொடுத்தார்.*

***நமது எதிர்கால நம்பிக்கையினிமித்தம் (3:1-3)***

*கிறிஸ்து வரும்போது, நாம் "அவரைப்போல் இருப்போம்." அந்த நம்பிக்கை நமக்கு இருக்கிறபடியால், "அவர் [சுத்தமுள்ளவராய்] இருக்கிறபடி" நம்மை நாமே சுத்திகரித்துக் கொள்வோம், அவருடைய வருகையில் அவருடையவர்களோடு ஏற்றுக்கொள்ளப்பட தகுதியாய் காணப்படும்படி அப்படிச் செய்வோம்.*[6]

***தேவனோடு நமக்குள்ள உறவினிமித்தம் (3:4-10)***

*யோவான் இரண்டு வகையான மக்கள் மற்றும் அவர்களுடைய வாழ்க்கை வழியை வேற்றுமை படுத்தியிருக்கிறார், ஒரு புறம், சிலர் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர்கள் எவ்விதம் வாழ்கிறார்கள்? அவர்கள் பழக்கரீதியாக பாவம் செய்வதில்லை, ஆனால் நீதியை நடப்பிக்கிறார்கள், மற்றொருபுறம், சிலர் பிசாசின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர்கள் தொடர்பாவ பழக்கத்தில் இருக்கிறார்கள்! நாம் பிசாசின் பிள்ளைகளாயிராமல், தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறபடியினால், நாம் பாவத்தில் தொடருவது தவறானதாயிருக்கிறது என்பதை யோவான் வலியுறுத்திக் கொண்டிருந்தார்! தேவனோடு நமக்குள்ள உறவினிமித்தமாக - நாம் அவருடைய பிள்ளைகளாயிருப்பதினிமித்தமாக - நாம் பாவத்தை விட்டு விலகி, நீதியாய் வாழ வேண்டும். பாவம் செய்து கொண்டு மற்றும் பிரமாணத்தை மீறி நடந்து கொண்டு, நீதியாய் வாழ்வதாக உரிமை கோருவது கேலிக்கிடமானதாக இருக்கும்.*

***மற்றவர்களோடு நமக்குள்ள உறவினிமித்தமாக (3:11-18)***

*யோவானுடைய பார்வையில், அன்பில்லாமல் இருப்பதே மிக மோசமான வகை பாவமாயிருக்கிறது. நாம் நம்முடைய சகோதரனை பகைத்தால், கொலை செய்த குற்றத்திற்கு உரியவர்களாயிருக்கிறோம் என்று அவர் சொன்னார்! ஆகவே நாம் பாவத்தை தவிர்த்து, நம்முடைய சகோதரர்களில் அன்புகூருவதின் மூலம் நீதியாய் வாழவேண்டும், மற்றவர்களோடு நமக்குள்ள உறவினிமித்தமாக - அவர்கள் கிறிஸ்துவுக்குள் நம்முடைய சகோதரர்களாக மற்றும் சகோதரிகளாக இருக்கிறபடியால் - அவர்களில் அன்புகூருவதால், நாம் நீதியை நடப்பிப்போம்.*[7] *அவர்களுக்கு விரோதமாய் நாம் பாவம் செய்வதை தவிர்க்கிறவர்களாக இருப்போம்.*

***நமது நிகழ்கால ஆசீர்வாதங்களினிமித்தம் (3:19-24)***

*இந்த வசனங்களில், யோவான் நாம் இந்த நிகழ்கால ஆசீர்வாதங்களை பெற்றுள்ளதாக கூறியுள்ளார்:*

*(1) தேவனால் நாம் அங்கீகரிக்கப்படுகிறோம் என்ற நம்பிக்கை (வசனங்கள் 21, 22),*

*(2) நமது ஜெபங்கள் பதிலளிக்கப்படுவதற்கான நிச்சயம் (வசனம் 22),*

(3) தேவன் நம்மில் நிலைத்திருக்கிறார் என்பதற்கான வாக்குத்தத்தம் (வசனம் 24ஆ),[8]

(4) கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அருளுகிற பரிசுத்த ஆவியானவர் (வசனம் 24ஆ).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நமக்கு இருக்கிறபடியால், நாம் பாவம் செய்வதை தவிர்த்து நீதியாய் வாழவேண்டும்; அல்லது யோவான் கூறியபடி, நாம் "அவருடைய கற்பனைகளை கைக்கொண்டு," "அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறவர்களாய்," "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசமுள்ளவர்களாய்," "ஒருவரிலொருவர் அன்பு கூரவேண்டும்."

## முடிவுரை

நாம் இயேசு கிறிஸ்துவின் மூலம் பாவம் செய்யும் பழக்கத்தை மேற்கொள்ள முடியும்; நாம் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியும், பாவத்தை தொடர்ந்து பழக்கமாக செய்யாமல் இருக்க முடியும். இருப்பினும், நாம் இப்படி செய்கிறோமா அல்லது இல்லையா என்பது முழுக்க முழுக்க கர்த்தரையே சார்ந்திருப்பதில்லை. நாம் கிறிஸ்தவர்களாக மாறும்போது, தானாகவே, நீதியாய் வாழ துவங்குவதில்லை. நாம் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு "ஒளியில் நடப்பதற்கு" எவ்வளவு சிறப்பாக செயல்பட முடியுமோ, அவ்வளவு சிறப்பாக செயல்பட வேண்டும் (1 யோவான் 1:7) நாம் சிறப்பாக செயல்பட்டால், தேவன் நம்முடைய வாழ்க்கையில் பாவத்தின்மேல் வெற்றிபெற நமக்கு பெலனளிப்பார்.

---

குறிப்புகள்

[1]ஜே. டபிள்யு. ராபர்ட்ஸ் என்பவரின் கூற்றுபடி, "அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது" என்பது தெளிவாக இல்லை. சிலர் "அவருடைய வித்து" என்பது "தேவனுடைய தன்மைக்கு (RSV) சமமாயிருக்கிறது என சிந்திக்கிறார்கள், இதை கிறிஸ்தவர்கள் மனமாறி குணப்படும் போது தங்கள் மேல் ஏற்றுக்கொள்கிறார்கள். சிலர் "வித்து" என்பதை "சந்ததி" என்ற அர்த்தத்தில் கண்ணோக்குகிறார்கள், சிலர் "வித்து" என்பதை பரிசுத்த ஆவிக்கு சமமாக்கி பார்க்கிறார்கள் (இருப்பினும் இந்த விளக்கத்திற்கு வேதாகம ஆதாரம் எதுவும் இல்லை என ராபர்ட்ஸ் கூறியுள்ளார்), மற்றும் மற்றவர்கள் "விதை" தேவனுடைய வசனம் என விளக்கப்படுத்துகிறார்கள் (காண்க லூக்கா 8:11; 1 பேதுரு 1:23). (J. W. Roberts, *The Letters of John,* The Living Word Commentary [Austin, Tex.: R. B. Sweet Co, 1968], 85.) [2]உதாரணத்திற்கு, மாயவித்தை சீமோனின் சம்பவத்தை பார்க்கவும் (நடபடிகள் 8:12-24). [3]உதாரணத்திற்கு, கலாத்தியர் 5:4; எபிரெயர் 6:4-6; யாக்கோபு 5:19, 20 வசனங்களை காணவும். [4]பல விளக்கவுரையாளர்கள் இந்த நிலைப்பாட்டுடன் ஒத்துப் போகிறார்கள். தாமஸ் எப். ஜான்சன் என்பவர், "ஆசிரியர் தொடர்ந்து நிகழ்கால வினைச் சொற்களை (பாவம் செய்து கொண்டே இருத்தல்) பயன்படுத்தி ... தான் பழக்கரீதியான, மனந்திரும்பாத, பாவம் செய்யும் பழக்கத்தை குறித்து பேசிக் கொண்டிருந்ததாக அடிக்கோடிட்டுக் காட்டினார்" (Thomas F. Johnson, *1, 2, and 3 John,* New International Biblical Commentary

[Peabody, Mass.: Hendrickson Publishers, 1993], 71; *வலியுறுத்தல் நீக்கப்பட்டுள்ளது). மற்ற விளக்கங்கள்* F. F. Bruce, *The Epistles of John: Introduction, Exposition and Notes* (N.p.: Pickering & Inglis, 1970; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 90, and Roberts, 82. *இவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன, மூன்று வகையான விளக்கங்கள் - இலக்கணரீதியாக, இறையியல்ரீதியாக மற்றும் சூழ்நிலையியல் ரீதியாக - விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன.* (Stephen S. Smalley, *1, 2, 3 John,* Word Biblical Commentary [Waco, Tex.: Word Books, 1984], 158-64.) [5]CEV *3:9 ஐ, "தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருப்பதில் இருக்கமாட்டார்கள் ... அவர்கள் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருக்கமுடியாது என மொழிபெயர்த்துள்ளது," மற்றும் 5:18 அவை, "தேவனுடைய பிள்ளைகள் தொடர்ந்து பாவம் செய்து கொண்டிருக்கமாட்டார்கள் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும்" என கூறுகிறது.* J. B. Phillips*இன் 3:6 க்கான மொழிபெயர்ப்பு, "கிறிஸ்துவுக்குள் வாழ்கிற ஒரு மனிதன் பழக்க அடிப்படையில் பாவம் செய்வதில்லை ..." என வாசிக்கிறது.* NIV *கீழ்வருமாறு மொழிபெயர்க்கிறது: "அவருக்குள் வாழ்கிறவன் தொடர்ந்து பாவம் செய்வதில்லை. பாவத்தில் தொடருகிற எவனும் அவரை காணவுமில்லை. அவரை அறியவுமில்லை" (3:6); "தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்யமாட்டான் (3:9); "தேவனால் பிறந்த எவனும் தொடர்ந்து பாவம் செய்வதில்லை என்று அறிந்திருக்கிறோம் ..." (5:18).* [6]*1 யோவான் கடைசியான காரியங்களை (மறுமையியல்) குறித்து போதிக்கும் பல குறிப்புகளை கொண்டுள்ளது. யோவான், "கடைசிகாலம்" (2:18), கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1 யோவான் 3:1, 2; 2:28), நியாயத்தீர்ப்பு (4:17), மற்றும் உலகத்தின் மாறிப்போகும் தன்மை குறித்து பேசினார். இதற்கு எதிராக, கிறிஸ்தவர்கள் என்றென்றும் வாழ்வார்கள் என்றும் (2:17) மற்றும் நித்திய ஜீவனை உடையவர்களாயிருப்பார்கள் என்றும் தெரிவித்தார் (2:25).* [7]*ஒப்பிடுக யாக்கோபு 2:14-17.* [8]*யோவான் தேவனோடு நமக்குள்ள உறவுக்கு பரிசுத்த ஆவியானவர் ஆதாரமாக இருக்கிறார் என்ற கருத்தை 4:13இல் திரும்ப திரும்ப கூறியுள்ளார். முன்னதாக, வசனங்கள் 2:20, 27இல் கிறிஸ்தவர்கள் தேவனிடத்திலிருந்து வந்த அபிஷேகத்தை பெற்றுள்ளார்கள் என்று பேசியபோது, அநேகமாக அவர் பரிசுத்த ஆவியானவரையே குறிப்பிட்டார். இந்த வசனங்களில் பேசப்படும் பரிசுத்த ஆவியானவரின் வரம் நம்மில் வாசமாயிருக்கிற ஆவியாயிருக்கிறது (காணவும் ரோமர் 5:5; 8:13, 26; நடபடிகள் 2:38; 5:32; கலாத்தியர் 4:6; 2 தீமோத்தேயு 1:14).* (Roberts, 100-101.)

---

## பாவத்தால் தோற்கடிக்கப்படுதல்

*ஒரு கிறிஸ்தவர் பாவத்தை மேற்கொள்ள முடியும் என்ற நற்செய்தியோடு, பாவத்தை குறித்த ஒரு கெட்ட செய்தியும் இருக்கிறது என்பதை யோவான் தெரிவிக்கிறார். நாம் ஐாக்கிரதையாயிராவிட்டால், பாவத்தால் தோற்கடிக்கப்படக்கூடும்! யோவான் நாம் பாவம் மற்றும் சாத்தானுக்கு எதிரான யுத்தத்தில் தோற்றுப்போவது சாத்தியமானது என குறிப்பிடுகிறார். அவர், "மரணத்துக்கு ஏதுவான பாவத்தை" குறித்து பேசியுள்ளார்:*

> *மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு,*

*அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன். அநீதியெல்லாம் பாவந்தான்; என்றாலும் மரணத்துக்கு ஏதுவல்லாத பாவமுமுண்டு (1 யோவான் 5:16, 17).*

## ஒரு விளக்கம்: "மரணத்துக்கு ஏதுவான பாவம்" என்றால் என்ன?

"மரணத்துக்கு ஏதுவான பாவம்" என்றால் என்ன? யோவான் முன்னதாக, "நாம் ஒளியிலே நடந்தால்," இயேசுவின் இரத்தம் "*சகல* பாவங்களையும்" நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோவான் 1:7) மற்றும் நாம் "நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால்," தேவன், "பாவங்களை நமக்கு மன்னித்து *எல்லா* அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9). என கூறினார். இதின் விளைவாக, "மரணத்துக்கு ஏதுவான பாவம்" என்பது ஒருவர் மனந்திரும்பி மற்றும் அறிக்கை செய்ய விரும்புகிற பாவமாக இராமல் மற்ற எந்த ஒரு பாவமாகவும் இருக்க முடியும்.

அப்படியானால் அது என்ன? அது ஒரு குறிப்பிட்ட (கொலை, விபச்சாரம் அல்லது பொய் போன்ற) பாவமாக இல்லாமல், ஒருவர் மனந்திரும்பி மற்றும் பாவங்களை அறிக்கை செய்ய இயலாத அளவுக்கு, விருப்பம் இல்லாதிருக்கிற அளவுக்கு அவருடைய இருதயம் அல்லது மனதை பின்னோக்கி இழுத்து வைத்திருக்கிற ஒரு நிலையாக இருக்கிறது.[1] ஆகவே, இது புதிய ஏற்பாட்டின் வேறு பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள இருதய கடினம் (எபிரெயர் 3:12, 13) அல்லது "சூடுண்ட மனச்சாட்சி" (1 தீமோத்தேயு 4:2) ஆகியவற்றிக்கு இணையாக சொல்லப்படக்கூடும். விசுவாசத்தை விட்டு விலகிப்போன ஒரு நிலை, "மனந்திரும்புவதற்கேதுவாக" புதுப்பிக்கப்பட இயலாத ஒரு நிலையாக மாறக்கூடும் (எபிரேயர் 6:4-6). ஒரு கிறிஸ்தவர் அந்த அளவுக்கு விழுந்து போகும்போது, அவர் மரணத்துக்கு ஏதுவாக பாவம் செய்து விட்டார் - அதாவது, அவர் நரகத்தில் நித்தியத்திற்கும் அழியும் ஒரு நிலைக்கு வந்து விட்டார் (அவர் தன் எண்ணத்தை மாற்றி, மனந்திரும்பினால் ஒழிய).

## நடைமுறைப்படுத்துதல்: ஒரு கிறிஸ்தவர் இந்த பாவத்தை செய்ய முடியுமா?

ஒரு கிறிஸ்தவர் உண்மையிலேயே இந்த நிலையை எட்டமுடியும் என்பதை நாம் உணரவேண்டும். அவர் தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டவராக மற்றும் மனச்சாட்சியில் சூடுண்டவராக கண்டுபிடிக்கக் கூடும். அவர் அந்த நிலையில் இருக்கும்போது, அவர் தன் பாவத்தை மேற்கொள்ளவில்லை, ஆனால் பாவம் தன்னை மேற்கொள்வதற்கு அனுமதித்து விட்டார்!

ஆகவே, கிறிஸ்தவருக்கு பாவத்தின்மேல் வெற்றி என்பது கைநழுவி போகக்கூடியதாக இருக்கிறது, அவர் ஜாக்கிரதையாயிருந்து, சத்தியத்தை பற்றிக் கொள்ளுதல், தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல், ஒளியில் நடத்தல் மற்றும் தன் சகோதரரில் அன்புகூருதல் ஆகிய இவைகளை நடப்பிக்கத்தவறினால், அவர் விழுந்துபோய் மற்றும் "மரணத்துக்கு ஏதுவாக ஒரு பாவத்தை" செய்தநிலையில் தன்னை கண்டுபிடிக்கக்கூடும்!

*ஒரு மனிதன் இந்த நிலையை வந்தடைகிற தொடர் செயல்களை, மலை உச்சியிலிருந்து கீழே தன் மிதிவண்டியை ஓட்ட தீர்மானிக்கிற ஒரு மனிதனுடைய நிலையோடு ஒப்பிடலாம். முதலில், மலையிறக்கபாதை மென்மையாக இருக்கிறது; எந்த நேரத்திலும் எதிர் திசையில் திரும்புவது என்பது கடினமாக இருக்காது. பின்னர், படிப்படியாக, மலைபாதை செங்குத்தாக கீழ்நோக்கி இறங்குகிறது. அதின் விளைவாக, அவன் கீழ்நோக்கி பயணம் செய்ய செய்ய வேகம் அதிகரித்துக் கொண்டே போகிறது. இப்போது மிதிவண்டியை திருப்புவது என்பது மிக கடினமாக மாறுகிறது. அவர் ஒரு அபாயகரமான கீழ் இறக்கம் என்பதை உணரலாம் மற்றும் திருப்பிக் கொண்டு, மேல்நோக்கி மலைமேல் பாதுகாப்பிற்காக சென்றுவிடலாம் என தீர்மானிக்கலாம். இருப்பினும், ஒரு வழியாக அவர் திருப்ப முயற்சித்த போது, நிறுத்த முடியாத அளவுக்கு தான் கீழ்நோக்கி வேகமாக சென்று கொண்டிருப்பதையும் மற்றும் இனி திருப்புவது சாத்தியமில்லை என்பதையும் அவர் அறிகிறார். அவர் தன் விருப்பத்திற்கு மாறாகக்கூடஅவர் தொடர்ந்து மலை இறக்கத்தில் தான் கீழே விழுந்து மடியும் வரை கூடுதல் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறார்!*

*இதே போல், நாம் பழக்க ரீதியாக பாவம் செய்ய துவங்கும் போது, ஆரம்பத்தில் அதை நிறுத்திவிடுவது சுலபமானதுபோல் தோன்றும். நாம் சில நேரங்களில் மக்கள், "நான் எப்போது விரும்புகிறேனோ அப்போதே நிறுத்தி விடுவேன்" என சொல்ல கேட்கிறோம். இருப்பினும், பாவம் அடிமைப்படுத்தக்கூடியதாக இருக்கிறது: ஒருவர் அதிகமாய் பாவம் செய்யச் செய்ய, அவர் பாவம் செய்ய அதிகமாய் விரும்புகிறார். அவர் தான் அடிக்கடி பாவம் செய்து, வேகமாய் கீழே இறங்கிவரும் நிலையில் தன்னை கண்டுபிடிக்கிறார். அநேகமாக ஏதோ ஒரு நிலையில் அவர், "இது மிகவும் அபாயகரமானது; நான் திரும்பிவிட வேண்டும்" என சொல்கிறார். எப்படியிருந்தாலும், அவர் முயற்சி செய்யும்போது, தன்னால் முடியவில்லை என்பதை அறிகிறார்! அவருடைய மனச்சாட்சி மறத்துப் போய்விட்டது, அவருடைய இருதயம் கடினப்பட்டு விட்டது மற்றும் அவர் மனந்திரும்புவதை இயலாததாக காண்கிறார்! அவர் "மரணத்துக்கு ஏதுவான ஒரு பாவத்தை" செய்துவிட்டார். அவர் பாவத்தை மேற்கொள்ளவில்லை; பாவம் அவரை மேற்கொண்டு விட்டது!*

## *முடிவுரை*

*உங்களுக்கானது எதுவாக இருக்கும்? நீங்கள் கிறிஸ்துவின் மூலமாய் பாவத்தை மேற்கொள்வீர்களா அல்லது பாவம் உங்களை மேற்கொள்ள அனுமதிப்பீர்களா? பாவம் உங்களை ஜெயித்துவிட்டு, உங்கள் எஜமானாக மாறியிருக்குமானால், இன்றே உங்கள் நிலையை மாற்றுங்கள். கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் "மனப்பூர்வமாய்" கீழ்ப்படிந்தால் (ரோமர் 6:17, 18), நீங்கள் பாவ மன்னிப்பை பெற முடியும் மற்றும் கிறிஸ்துவை உங்கள் கர்த்தராக கொள்ள முடியும். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிப்பதால், உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்புவதால், உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்வதால், மற்றும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதால், ஒரு கிறிஸ்தவராக மாறலாம், நீங்கள் தண்ணீர் ஞானஸ்நானத்திலிருந்து பாவத்தின் மேல் வெற்றி பெற்றவர்களாய் வெளி வருவீர்கள்! நீங்கள் பாவம் செய்வதால் அழிவை நோக்கி செல்லும்*

*செங்குத்தான மலைப்பாதையில், கீழ்நோக்கி பயணத்தை துவங்கிவிட்ட ஒரு கிறிஸ்தவராக இருந்தால் - ஒருவேளை சிறிதளவு மற்றும் கூடுதலாக - நீங்கள் உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி மற்றும் அறிக்கை செய்வதால், நீங்கள் கர்த்தரிடத்தில் திரும்பலாம். நீங்கள் இதை செய்தால், "உண்மையும் நீதியுமுள்ள" தேவன் உங்கள் பாவங்களை மன்னிப்பார்!*

*நீங்கள் "ஒரு மரணத்துக்கு ஏதுவான பாவத்தை" செய்திருக்கக்கூடும் என கவலைப்படுகிறீர்களா? என்னை கேளுங்கள்: நீங்கள் கரிசனைப்படக் கூடியவராக இருந்தால், பின் நீங்கள் அப்படிப்பட்ட ஒரு பாவத்தை செய்யவில்லை! இருப்பினும், உங்களால் முடியும் போது, மனந்திரும்பி, திரும்பி வரவேண்டிய அவசியம் உள்ளது! நரகத்திற்கு செல்லும் சாலை செங்குத்தானதாக மாறுகிறது; நீங்கள் எவ்வளவு காலம் தாமதிக்கிறீர்களோ, மனந்திரும்புவது அவ்வளவு கடினமானதாக மாறிவிடும். நீங்கள் செய்யவேண்டிய மாற்றங்களை இன்றே செய்யுங்கள்!*

*கிறிஸ்து பாவத்தின் மேலான வெற்றியை சாத்தியமாக்குகிறார். தெரிவு உங்களுடையது; நீங்கள் பாவத்தை மேற்கொள்வீர்களா, அல்லது பாவம் உங்களை மேற்கொள்ளவும் மற்றும் உங்களை நரகத்திற்கு அனுப்பவும் அதை அனுமதிப்பீர்களா?*

---

*குறிப்பு*

[1]*இப்படிப்பட்ட முடிவுக்கு வந்த எழுத்தாளர்களில் இவர்களும் இருந்தனர்.* Tom L. Bright, "Difficult Passages in 1, 2, 3 John, No. III," *Denton Lectures* (1987), 402-6; Guy N. Woods, *A Commentary on the New Testament Epistles of Peter, John, and Jude* (Nashville: Gospel Advocate Co., 1983), 319-22.